**கட்டுநாயக்க சீதுவ நகர சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கட்டுநாயக்க சீதுவ நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் குறிப்பாக இனங்காண முடியாதிருந்த வருமானம் மற்றும் செலவினங்கள் காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் முத்திரை வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டமையினால் கிடைக்க வேண்டிய முத்திரை வருமானம் மற்றும் ஆண்டின் வருமானம் என்பன ரூபா 1,051,250 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் கணக்குகளை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த முத்திரை வருமானமான ரூபா 1,051,250 தொகை 2020 சனவரி மாதத்தில் கிடைத்திருந்ததை அறியத்தருகின்றோம். |

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் கணக்குகளை தயாரிக்கும் | சபைக்கு சொந்தமான சகல | எதிர்காலத்தல் ஐயவினாக்களுக்குரிய |

| | | | |
|---|---|---|---|
| | போது 29 காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சொத்துக்களும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏனைய காணிகளை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் பௌதீக இருப்பு கணக்கிற்கு கொண்டுவரப்படாமல் ரூபா 8,917,189 தொகையான புத்தக பெறுமதி கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. | பௌதீக இருப்பையும் புத்தக இருப்பையும் இணக்கம் செய்து சீராக்கல் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | புத்தக இருப்பு மற்றும் பௌதீக இருப்பு மாதாந்தம் இணக்கம் செய்யப்படுகின்றமையினால் அந்த கணக்கு தயாரிக்கப்படாதிருந்ததை அறியத்தருகின்றோம். |

**1.3.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 04 கணக்கு விடயங்களின் மீதிகளுக்கும், உபயோக பதிவேடுகளின் பிரகாரமான மீதிகளுக்கும் இடையே ரூபா 7,664,336 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உபயோக பதிவேடுகள் மற்றும் கணக்கு மீதிகளை இணக்கம் செய்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

**1.3.4 தொங்கல் கணக்கு**

முன்னைய ஆண்டில் இறுதி கணக்குகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 12,051,288 தொகையான தொங்கல் கணக்கின் மீதி மீளாய்வாண்டின் போது தீர்வு செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டில் நிலுவை ஆதன வரி கணக்கில் பதிவழித்தல் ரூபா 2,366,571 தொகையில் இனங்காணப்படாத பெறுமதி ரூபா 97,644 ஆகும். | இனங்காணப்படாத மீதியை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டில் கிடைக்க வேண்டிய மூலதன நிதி உதவி கணக்கில் நிதி பெறுவனவுகள் மற்றும் உள்ளபடியான பெறுவனவுகளுக்கு இடையே ரூபா 13,484,349 | பெறுமதிகளை உறுதிப்படுத்தும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான வேறுபாடு காணப்பட்ட போதிலும், திருத்தப்பட்ட கணக்குகளில் ரூபா 12,760,606 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையினால் ரூபா 723,743 தொகையான வேறுபாட்டிற்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய வருமான நிலுவையாக காண்பிக்கப்பட்ட ரூபா 625,052 பெறுமதியொன்று உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கணக்கீடு செய்யப்பட்டுள்ள நிலுவை வருமானத்தை உறுதிப்படுத்துவதற்கு முடியுமான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2018 யூலை 19 ஆந் திகதிய 2018/e-Local Government-01 ஆம் இலக்க மேல் மாாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | இணையதளம் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கும் கொடுப்பனவு செய்வதற்கு பிரஜைகளுக்கு வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இணையதள வசதிகளின் மூலம் மக்களுக்கு சேவை வழங்கப்பட வேண்டும். | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இணையதளத்தை வடிவமைப்பதற்காக கேள்விதாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 149,282,566 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 64,410,937 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | வீதவரியும் வரியும் | 106,868 | 110,822 | 103,496 | 28,501 | 106,309 | 110,112 | 98,850 | 11,261 |
| (ii) | வாடகை | 10,635 | 10,011 | 12,511 | 408 | 11,325 | 12,734 | 12,396 | 338 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 9,301 | 5,259 | 6,563 | - | 2,151 | 2,703 | 2,703 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 157,487 | 1,028 | 128,109 | 12,118 | 59,359 | 44,986 | 44,788 | 10,976 |
| | | 284,291 | 127,120 | 250,679 | 41,027 | 179,144 | 170,535 | 158,737 | 22,575 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

**(அ) ஆதன வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போதும் ஆதன வரி அறவிடப்பட்டிருந்தது. | 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீட்டை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது 2009 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் பிரகாரம் ஆதன வரி அறவிடப்பட்டிருந்ததுடன், சபை தீர்மானத்தின் அடிப்படையில் விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்துடன் வியாபாரத்திற்காக 15 சதவீதமும் வீடுகளுக்காக 4 சதவீதமும் அறவிடப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். |

**(ஆ) வியாபார வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்கின்ற | சபை அதிகாரப் பிரதேசத்திலுள்ள வியாபார நிறுவனங்களில் | தற்போது அறவிடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

| | | |
|---|---|---|
| காப்புறுதி முகவராண்மை நிறுவனங்கள் எதிலும் வியாபார வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | நாளதுவரையாக வியாபார வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

### 2.2.3 அனுமதிப்பத்திர கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றுலா சபை அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள வெதுப்பகங்கள், விருந்தினர் விடுதிகள் மற்றும் ஹோட்டல்களில் கடந்த ஆண்டின் மொத்த புரள்வில் 1 வீதம் வரையான கட்டணம் அறவிட முடியுமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் அதற்கு முரணாக நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் விருந்தினர் விடுதிகள் மற்றும் 07 ஹோட்டல்களில் அறையின் அடிப்படையில் வருடாந்த கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | மொத்த புரள்வின் அடிப்படையில் வருடாந்த கட்டணம் அறவிடப்பட வேண்டும். | நகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு முதல் அந்த செயற்பாடுகள் சரிசெய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்கின்ற வியாபாரங்கள் மற்றும் 16 கைத்தொழில் நிறுவனங்களுக்காக மீளாய்வாண்டில் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் விநியோகித்து கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திர கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெறுமாறு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன். இதுவரையில் 05 நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

### 2.2.4 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கட்டணம் அறவிடப்படாமல் சபையின் கழிவுப் பொருள் தளத்தில் கழிவுகளை அகற்றுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் 03 வியாபார நிறுவனங்களில் இருந்து மாத்திரம் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | கழிவுப் பொருள் முகாமைத்துவ விதிகளின் பிரகாரம் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது அவ்வாறு கழிவுப் பொருட்களைக் கொண்டுவருகின்ற தனியார் வாகனங்களை நிறுத்தி நாளொன்றுக்கு ரூபா 8,000 தொகையொன்று அறவிடப்பட்டு சபைக்கு சொந்தமான டெக்ரர் மூலம் கழிவுப் பொருட்கள் கொண்டு செல்லப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் அதன் இணையதளத்தின் ஊடாக வழங்கப்பட்டு, இணையதளத்தின் ஊடாக அல்லது மாற்று வழிகளின் ஊடாக நிறுவனங்கள் தொடர்பாக பொது மக்களின் எண்ணங்கள் / முறைப்பாடுகளை பிரசுரிப்பதற்கு வசதிகளை வழங்குதல், நுகர்வோர்களுக்கு சாதகமான சேவையொன்றை வழங்குவதற்காக முன்னேற்பாட்டு அலுவலகமொன்று மற்றும் நுகர்வோர் சேவை நிலையமொன்றை | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் முன்னேற்பாட்டு அலுவலகமொன்று மற்றும் நுகர்வோர் சேவை நிலையமொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். | அலுவலக கட்டிட வளவில் இட வசதிகள் காணப்படாமையினால் பழைய கட்டிடத்தை புதுப்பித்ததன் பின்னர் முன்னேற்பாட்டு அலுவலகமொன்று அமைக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

அறிமுகப்படுத்தல் போன்ற தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்தவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கழிவுப் பொருள் தளத்தின் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட பெக்கோ இயந்திரம் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படாமையின் காரணமான கழிவுப் பொருள் வெளி சுற்றாடலுக்கு பரவியமையினால் சுற்றாடலுக்கு அதிக பாதிப்பொன்று ஏற்பட்டிருந்ததுடன் 2020 பெப்ரவரி 20 ஆம் திகதி கழிவுப் பொருள் தளத்தில் தீயொன்று ஏற்பட்டதன் காரணமாக சுற்றாடலுக்கும் அதிக பாதிப்பு ஏற்பட்டிருந்தது. | கழிவுப் பொருள் பிரிவு சுற்றாடல் பாதிப்புக்களை குறைக்கும் வகையில் நடாத்திச் செல்லப்பட வேண்டும். | கழிவுப் பொருள் பிரிவில் கழிவுப் பொருளை கூறுகளாக்குவதற்காக கணிசமான ஊழியத் தொகையொன்றை செலுத்துவதற்கு ஏற்பட்டமையினால் கழிவுப் பொருள் தளத்தை தினந்தோறும் உரிய பிரகாரம் பராமரிப்பதற்காக D5D இயந்திரம் ஒன்று சபையின் மூலம் கொள்வனவு செய்வதற்காக கட்டளை வழங்கப்பட்டுள்ளதையும் அறியத்தருகின்றோம். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

**3.2.1 ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் சேவையாற்றுகின்ற ஊழியர்கள் இருவரிடம் இருந்தும், மற்றும் இடம்மாற்றலாகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிட வேண்டிய ரூபா 126,086 தொகை மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 158,314 தொகையான கடன் மீதிகளையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இடம்மாற்றலாகிச் சென்ற மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இடம்மாற்றலாகிச் சென்ற மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் போக்குவரத்து சேவை நடவடிக்கைகளை நடாத்திச் செல்கின்ற முச்சக்கர வண்டி சங்கத்தில் பதிவுசெய்து கட்டணத்தை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளை விதிப்பதன் மூலம் வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2015 செப்தெம்பர் 22 ஆம் திகதி மேல்மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட உப விதி 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் போது இந்த அதிகாரப் பிரதேசத்திற்கும் உரித்தாக்கிக் கொள்வதற்கு முன்மொழிவொன்று அங்கீகரிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 பொருள் மெய்மெய்யாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட 21 பேர்ச் அளவான கட்டுநாயக்கவில் அமைந்துள்ள அம்பகஹவத்தை கட்டுநாயக காணியும், 21 பேர்ச் அளவான அமன்தொலுவயில் அமைந்துள்ள கொரகஹகும்புர காணி மற்றும் 07 டேலர்களும் மீளாய்வாண்டின் பொருள் மெய்மெய்யாய்வின் போது கண்டறிய முடியாததாக குறிப்பிடப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்கும், சட்ட ரீதியான உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தெளிவான திட்டமொன்று அல்லது உரித்துறுதியொன்றை கண்டறிய முடியாமையின் காரணமாக காணியை கண்டறிவதற்கு முடியாத நிலைமை காணப்படுவதுடன் காணிக் கச்சேரி மூலம் விபரங்களை கண்டறிந்து எதிர்கால நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன், 40 பேர்ச் அளவான அமன்தொலுவயில் அமைந்துள்ள கொரகஹகும்புர காணிக்காக இலஞ்ச, ஊழல் மற்றும் புலனாய்வு ஆணைக்குழு மூலம் விசாரணையொன்று நடாத்திச் |

| | | |
|---|---|---|
| | | செல்லப்படுவதுடன் எதிர்காலத்தில் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) சபைக்கு சொந்தமானதாக இனங்காணப்பட்ட உரித்துறுதி அல்லது வரைபடத் திட்டங்கள் காணப்படாத 27 காணிகள் காணப்பட்டன. | சபைக்கு சொந்தமான காணிகளின் சட்ட ரீதியான உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த காணி நகர சபை மூலம் நீண்ட காலமாக உரிமை கோரப்படுகின்ற காணியான இருந்ததுடன் சபையின் இணக்கப்பாட்டினை விசாரித்து வெளிப்படுத்தல் உரித்துறுதியை தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

## 3.5 பெறுகைகள்

### 3.5.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு நூலகத்திற்கு புத்தகங்களை கொள்வனவு செய்யும் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 9.4.1 இன் பிரகாரம் வெளியீடுகளை கொள்வனவு செய்யாமையினால் கிடைக்க வேண்டிய 20 சதவீத கழிவு 10 சதவீதம் ஆனமையால் சபைக்கு ரூபா 59,641 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. புத்தகங்கள் இரண்டு வெளியீட்டுக் கம்பனிலிருந்து மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த கம்பனி இரண்டையும் தெரிவு செய்வதற்காக எந்தவொரு பெறுகை நடைமுறையும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேசத்தின் 10 பாடசாலைகளுக்குத் தேவையான புத்தகங்களுக்காக முன்மொழிவுகள் பெறப்பட்டிருந்தன. அதேகமான புத்தகங்கள் நூலகத்தில் தற்போது காணப்படுகின்றமையினால் பாடசாலைகளில் இருந்து கிடைத்துள்ள முன்மொழிவுகளில் 25 சதவீத அளவு மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது என்பதை அறியத்தருகின்றோம். |